1973 நவம்பர் 20]

திரு. சு. துரைசாமி : கோவையில் இருக்கிற டெக்ஸ்டூல் கம்பெனியை அரசு ஏற்று நடத்துகிறது. பாலசுந்தரம் அவர்கள் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பே ஒரு சிறிய கார் தயாரித்தார். அதை மீண்டும் தயாரிப்பதற்கு அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைப்பற்றிய தகவல் இல்லை.

திருநெல்வேலி நீதி மன்றங்கள்.

* 220 வினா—**திரு. சங்கமுத்து தேவர் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் (கொக்கிரகுளம்) மாவட்ட நீதிமன்றம் மற்றும் அதைச் சார்ந்த மற்ற நீதி மன்றங்களையும் தற்போது கொக்கிரகுளத்திலிருந்து வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) கொக்கிர குளத்தில் இப்போது செயல்பட்டு வருகின்ற எல்லா நீதிமன்றங்களும் ஒருங்கே அமையும் வகையில் கட்டிடம் ஒன்றை பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரி வளவில் கட்டுவது பற்றிய செயற்குறிப்பை அண்மையில் அரசு ஆராய்ந்தது. நிதி நெருக்கடியை முன்னிட்டு அந்தச் செயற் குறிப்பு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

திரு. ச. சங்குமுத்து தேவர் : இப்போது நடத்தப்படுகிற இந்தயிடத்திலேயே மேற்படி கட்டடங்களை நல்லமுறையில் கட்டுவதற்கான வசதி இருப்பதாகத் தெரிகிறதே, இந்த இடத்திலேயே அவற்றை அமைப்பதற்கு அரசாங்கம் பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த இடம் ஆற்றோரத்தில் இருக்கிறது. அந்த இடம் நல்ல இடமா அல்லது பாளையங்கோட்டை மருத்துவமனைக்குப் பக்கத்தில் உள்ள இடம் நல்ல இடமா என்பதில் கருத்து வேறுபாடு இருக்கிறது. திட்டமே தள்ளி வைக்கப்பட்டிருப்பதால் இப்பிரச்னை இப்போது எழவில்லை.